திமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
தினமணி
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

**விவசாயிகளுக்காக 20 இடங்களில் உலர் களங்கள், சேமிப்புக் கிடங்குகள்**

First Published : 22 Sep 2010 08:46:41 AM IST

காஞ்சிபுரம், செப். 21: காஞ்சிபுரம் மாவட்டத்தில் விவசாயிகள் தங்கள் தானியங்கள், பயறு வகைகளை உலர்த்திக் கொள்ள வசதியாக மேலும் 20 இடங்களில் உலர் களம் அமைத்து கொடுக்க காஞ்சிபுரம் திருவள்ளூர் மாவட்ட ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் முடிவு செய்துள்ளது.

÷காஞ்சிபுரம் மாவட்டத்தில் கிராம பஞ்சாயத்து தோறும் ஏற்கெனவே சிறு களங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. இவை தவிர காஞ்சிபுரம், திருவள்ளூர் மாவட்ட ஒழுங்குமுறை விற்பனைக்கூடம் சார்பிலும் பல்வேறு இடங்களில் களங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன.

காஞ்சிபுரத்தில் உள்ள தலைமை அலுவலகம் அருகே இப்போது இரு களங்கள் அமைக்கப்பட்டுள்ளது. அங்கு ஏற்கெனவே ஒரு குடோன் உள்ளது.

மேலும் ஒரு குடோன் அமைக்கப்பட உள்ளது. இதுபோல் ஏற்கெனவே ஒழுங்குமுறை விற்பனைக்கூடம் மூலம் காஞ்சிபுரம் மாவட்டத்தில் 20 கிராமங்களில் களங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இந்த ஆண்டு மேலும் 20 கிராமங்களில் களங்கள் அமைக்கப்பட உள்ளன. ஒரு களம் ரூ. 2.5 லட்சத்தில் இருந்து ரூ. 3 லட்சம் வரையிலான செலவில் அமைக்கப்படுகிறது.

÷காஞ்சிபுரம் மட்டும் இன்றி, மதுராந்தகம், திருக்கழுகுன்றம் ஆகிய இடங்களிலும் களங்கள் அமைக்கப்பட உள்ளன.

5 இடங்களில் உழவர் சந்தை: தமிழகம் முழுவதும் 25 இடங்களில் உழவர் சந்தைகள் அமைக்க தமிழக அரசு முடிவு செய்துள்ளது. இதில் காஞ்சிபுரம் மாவட்டத்தில் படப்பை, திருக்கழுகுன்றம், ஜமீன் பல்லாவரம், அஸ்தினாபுரம், கூடுவாஞ்சேரி ஆகிய 5 இடங்களில் உழவர் சந்தைகள் அமைக்கப்படுகின்றன. இந்த உழவர் சந்தைகள் ஒவ்வொன்றும் ரூ. 22.5 லட்சம் செலவில் அமைக்கப்பட உள்ளது.

÷இது குறித்து, காஞ்சிபுரம், திருவள்ளூர் மாவட்ட ஒழுங்குமுறை விற்பனை கூட செயலர் திருமாவளவன் கூறியது:

விலை பொருள்களில் சரிவு ஏற்பட்டால் இந்த களங்களில் இலவசமாக தானியங்களை உலர வைத்து எங்கள் குடோன்களில் விவசாயிகள் சேமித்து வைக்கலாம்.

குடோன்களில் சேமிக்க ஒரு மூட்டைக்கு ஒரு நாளைக்கு 10 பைசா, 15 பைசா என்ற வகையில் பணம் வசூலிக்கிறோம்.

தங்கள் விளைப் பொருள்களின் விலை உயரும்போது விவசாயிகள் இதனை விற்கலாம். அதற்கு இடையில் அவர்களுக்கு பணத் தேவை ஏற்பட்டால் அவர்கள் சேமித்து வைத்துள்ள பொருளின் மதிப்புக்கு ஏற்ப ரூ. 1 லட்சத்துக்கு மிகாமல் நாங்களே கடன் வழங்குகிறோம்.

எனவே விலைச் சரிவு ஏற்பட்டால் அவசரப்பட்டு விவசாயிகள் பொருள்களை விற்க வேண்டியதில்லை. அதற்காகத்தான் களங்கள், குடோன்கள் அமைக்கப்பட உள்ளன
என்றார்.

**தனியார் கடைகளிலும் மானிய விலையில் நெல் விதைகள்**

First Published : 21 Sep 2010 11:19:59 AM IST

புதுக்கோட்டை, செப். 20: தனியார் கடைகளில் விவசாயிகள் வாங்கும் நெல் விதைகளுக்கு மானியம் அளிக்கப்படுகிறது.

இதுதொடர்பாக வேளாண் உதவி இயக்குநர் கே.எம். ஷாஜஹான் தெரிவித்தது: தேசிய உணவுப் பாதுகாப்புத் திட்டத்தின் மூலம் நெல் விதை கிலோவுக்கு ரூ. 5, வீரிய ஒட்டுரக நெல் விதை கிலோவுக்கு ரூ. 20 மானியமாக வழங்கப்படுகிறது. விவசாயிகள் அந்தந்த பகுதி உதவி வேளாண் அலுவலர்களை அணுகி மானிய விண்ணப்பத்தைப் பெற்று பயன்பெறலாம் என்றார் அவர்.

**அதிக விலைக்கு உரம் விற்றால் கடும் நடவடிக்கை: வேளாண் இணை இயக்குநர்**

First Published : 21 Sep 2010 11:19:49 AM IST

புதுக்கோட்டை, செப். 20: உரங்களை அதிக விலைக்கு விற்பனை செய்வோர் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்று எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக வேளாண் இணை இயக்குநர் தி. தங்கவேலு வெளியிட்ட செய்திக் குறிப்பு:

புதுக்கோட்டை மாவட்டத்தில் நிகழ் சம்பா பருவத்துக்குத் தேவையான உரங்கள் போதிய அளவில் இருப்பில் வைக்கப்பட்டு, விவசாயிகளுக்கு விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

மேலும், கூட்டுறவு, தனியார் விற்பனை நிலையங்கள் மூலமாகவும் உரங்கள் விற்பனை செய்யப்படும் நிலையில், கடைக்காரர்கள் உர மூடையில் குறிப்பிட்டுள்ள விலைக்கு மிகாமல் விற்பனை செய்ய வேண்டும். விற்பனை செய்ததற்குரிய ரசீது வழங்க வேண்டும். உரங்களின் இருப்பு விவரத்தை தினமும் கடை முன்பு அறிவிப்புப் பலகையில் எழுதிவைக்க வேண்டும்.

விவசாயிகளுக்கு மட்டுமே உரங்களை விற்பனை செய்ய வேண்டும். விவசாயம் அல்லாத பிற தொழில்களுக்கு உரங்களை விற்பனை செய்வதோ, உர விற்பனையாளர்கள் உரிமத்தில் அனுமதி பெறாத உர நிறுவனங்களிடமிருந்து உரம் கொள்முதல் செய்வதோ, உரிமம் பெறாமல் விற்பனை செய்வதோ கூடாது. இந்த விதிமுறைகளை மீறும் உர விற்பனையாளர்களின் உர விற்பனை உரிமம்

ரத்து செய்யப்படுவதுடன், உரக் கட்டுப்பாட்டுச் சட்டம் 1985-ன் கீழ் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும்.

மேலும், விவசாயிகள் தங்கள் வயல்களில் மண் பரிசோதனை செய்த பிறகே உரங்களைப் பயன்படுத்த வேண்டும். உயிர் உரங்களை அதிகளவில் பயன்படுத்தினால் ரசாயன உரங்களின் தேவை குறைவதுடன், மண் வளத்தையும் பாதுகாக்கலாம் என்று அதில் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

**நிலக்கடலை சாகுபடியில் வயல்வெளிப் பள்ளி பயிற்சி**

First Published : 21 Sep 2010 11:16:18 AM IST

பெரம்பலூர், செப். 20: பெரம்பலூர் அருகேயுள்ள சத்திரமனை கிராமத்தில் ஹேன்ஸ் ரோவர் வேளாண் அறிவியல் மையம் சார்பில், நிலக்கடலை சாகுபடி செய்துள்ள விவசாயிகளின் வயல்களில் வயல் வெளிப் பள்ளி பயிற்சி முகாம் சனிக்கிழமை நடைபெற்றது.

இந்தப் பயிற்சி முகாமில் தொழில்நுட்ப நிபுணர் ஜெ. கிருஷ்ணன், வயல்வெளிப் பள்ளியின் நோக்கம், மையக் கருத்தை விளக்கிப் பேசினார்.

இதைத் தொடர்ந்து, திட்ட ஒருங்கிணைப்பாளர் ஆர். மாரிமுத்து, கடலை பயிரிடுவதற்கான நிலத்தை தயார் செய்தல், உயிர் உரங்கள் பயன்பாடு, ஊட்டமேற்றிய தொழு உரம் தயாரித்தல் குறித்து விளக்கிப் பேசினார்.

இதில் சத்திரமனை கிராமத்தைச் சேர்நத விவசாயிகள் பலர் பங்கேற்று பயிற்சி பெற்றனர்.

**போச்சம்பள்ளி சந்தையில் பீன்ஸ், கேரட் விலை சரிவு**

First Published : 21 Sep 2010 10:21:23 AM IST

போச்சம்பள்ளி, செப்.20: போச்சம்பள்ளி வாரச்சந்தையில் பீன்ஸ், கேரட் ஆகியவற்றின் விலை திடீரென பாதியாக சரிந்துள்ளது.

போச்சம்பள்ளியில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற வாரச்சந்தையில் பீன்ஸ், காரட் ஆகியவை கிலோ ரூ.20-க்கு விற்பனையாகின. இவை இரண்டும் கடந்த வாரம் கிலோ ரூ.40-க்கு விற்பனையானது.

கடந்த வாரம் ரூ.4-க்கு விற்பனையான, தேங்காய் இந்த வாரம் ரூ.5.50 முதல் ரூ.6 வரை விற்பனை செய்யப்பட்டது. கடந்த வாரம் ரூ.110 முதல் ரூ.120 வரை இருந்த பூண்டு ரூ.140 ஆகவும், ரூ.60 முதல் ரூ.70 வரை விற்பனையான மிளகாய் ரூ.75 ஆகவும் விலை உயர்ந்துள்ளது.

பச்சை மிளகாய் ரூ.13-ல் இருந்து ரூ.15 ஆகவும், வெல்லம் ரூ.25-ல் இருந்து ரூ.28 ஆகவும் விலை உயர்ந்துள்ளது. தக்காளி கிலோ ரூ.9, வெண்டை ரூ.9, பெரிய வெங்காயம் ரூ.14, சின்ன வெங்காயம் ரூ.13 என விற்பனை செய்யப்பட்டது.

பொன்னி அரிசி 100 கிலோ ரூ.2,400 முதல் ரூ.2,500 வரையும், புழுங்கல் அரிசி ரூ.2,300 முதல் ரூ.2,400 வரையும், ஏ.டி.டி. ரகம் ரூ.1,800 முதல் ரூ.1,900 வரையும் விற்பனையானது.

**பசிநோய் தீர்க்காத பசுமைப் புரட்சி**

*தில்லை நாகசாமி*

First Published : 21 Sep 2010 12:00:00 AM IST

1950களில் அமெரிக்க உணவுக் கிடங்குகள் நிரம்பி வழிந்தன. நாட்டின் தேவையைவிட இரண்டு மடங்கு அதிக அளவு கோதுமை கையிருப்பு இருந்தது. அந்த உபரி கோதுமையை என்ன செய்வது என்று சிந்தித்துக் கொண்டிருந்த அமெரிக்க ஜனாதிபதி ஐசன்ஹோவரின் மூளையில் ஒரு யோசனை பட்டுத்தெறித்தது.

÷அதன் விளைவாக 1954-ம் ஆண்டு அவர் பி.எல்.-480 என்னும் சட்டத்தை அறிமுகப்படுத்தி, உணவு தேவைப்படும் நாடுகளுக்கு கோதுமையை ஏற்றுமதி செய்து அமெரிக்க விவசாயிகளுக்குப் பாதுகாப்புத் தேடிக்கொடுத்தார்.

÷1956-ம் ஆண்டு முதல் 1971-ம் ஆண்டுவரை இந்தியா பி.எல்.-480 சட்டத்தின் கீழ் சுமார் 5 கோடி டன் அளவு கோதுமையை இறக்குமதி செய்தது. அன்றைய இந்தியப் பிரதமர் ஜவாஹர்லால் நேருவுக்கு அமெரிக்காவின் பொருளாதாரக் கொள்கைகள் பலவற்றில் உடன்பாடு இல்லையென்றாலும், தன் நாட்டு மக்களின் பசியைத் தீர்க்க அவர் அமெரிக்க கோதுமையை இறக்குமதி செய்து விநியோகித்தார்.

÷இன்று, இந்திய அரசின் கிடங்குகள் தானியங்களால் நிரம்பி வழிகின்றன. உழவன் உயிரைப் பிசைந்தூட்டி விளைவித்த தானிய வகைகள் வைப்பதற்கு இடமின்றி தினம் பாழாகிக் கொண்டிருக்கின்றன. அன்றைய அமெரிக்கர்களின் வயிறுநிறைந்த பிறகுதான் அந்நாட்டின் கிடங்குகள் நிரம்பின. நம் நாட்டில் பலகோடி மக்கள் பசியால் முறுக்கப்படுகின்ற வயிறோடு உறக்கத்தைத் தொலைத்தவர்களாக இருக்கிறபோது, இங்கே கிடங்குகள் நிரம்பி வழிகின்றன. இதற்காகவா பதினோரு ஐந்தாண்டுத் திட்டங்களும் பசுமைப் புரட்சியும்.

÷37 சதவீத இந்தியர்கள் வறுமைக்கோட்டுக்குக் கீழே இருப்பதாக மத்திய அரசு தெரிவிக்கிறது. பாழாகிப் போனாலும் பரவாயில்லை; அதை வறுமையால் வாடுபவர்களுக்கு இலவசமாக விநியோகிக்க இயலாது என்று பிரதமர் மன்மோகன்சிங் கைவிரிக்கிறார்.

வாங்கும் சக்தி இருந்தால் பணம் கொடுத்து வாங்கிச் சாப்பிடு, இல்லையெனில் பட்டினிகிட என்பதுதானே இதன் அர்த்தம். பாதாம் பாலை சுவைத்துக் கொண்டிருக்கிற இனிப்புக் கடைக்காரர், அடுக்கப்பட்டிருக்கும் இனிப்பு வகைகளை வெறித்துப் பார்க்கும் ஏழைச் சிறார்களுக்கு உதிர்ந்த இனிப்புத் துகள்களை இலவசமாக அள்ளித் தருகிறபோது நம் மனதில் உயர்ந்து நிற்கிறாரே. காசேதான்

கடவுளடா என்ற கொள்கையோடு ஒன்றிப்போன அந்தக் கடைக்காரருக்கு இருக்கிற மனிதாபிமானம்கூட, ஆட்சியாளர்களுக்கு இல்லாமல் போனது ஏன்?

÷ஆட்சியாளர்கள் கடமை தவறுகிறபோது, அரசியலமைப்புச் சட்டத்தின் பாதுகாவலனாக இருக்கிற உச்ச நீதிமன்றம் தவறைச் சுட்டிக்காட்டவில்லையென்றால், அதன் பணிதான் என்ன? லட்சக்கணக்கான டன் தானியங்கள் நாடு முழுதும் கிடங்குகளில் வீணடிக்கப்படுவது தொடர்பான பொதுநல வழக்கை விசாரித்த உச்ச நீதிமன்றம், பாதுகாப்பாக சேமிக்கமுடிவதை மாத்திரம் கொள்முதல் செய்யுங்கள், கொள்முதல் செய்ததை வீணடிக்காதீர்கள், மலிவு விலைக்கோ அல்லது இலவசமாகவோ வறுமையில் உழல்பவர்களுக்குக் கொடுத்துவிடுங்கள் என்றது.

÷இதற்குப் பதிலளித்த பிரதமர் மன்மோகன்சிங், உச்ச நீதிமன்றம் அரசின் கொள்கைமுடிவுகளில் தலையிடுவது சரியல்ல என்று கூறினார். எதிலும் நிதானத்தோடு பதிலளிக்கக்கூடிய பிரதமரின் இந்த சர்ச்சைக்குரிய கருத்து அனுமன் வாலில் பற்றிய தீயாகிப்போனதை உணர்ந்த மத்திய அரசு, 25 லட்சம் டன் தானியத்தை வறுமைக் கோட்டுக்குக் கீழே உள்ளவர்களுக்கு விநியோகிப்பதாக உச்ச நீதிமன்றத்தில் தெரிவித்தது.

÷நாட்டு மக்கள் குறைந்தபட்சம் பசியின்றி இருக்க வேண்டும் என்பது ஒரு அரசின் கொள்கை முடிவைப் பொறுத்தது என்ற கருத்து, மூளையை சம்மட்டி கொண்டு அடிப்பதாகவே இருக்கிறது.

÷ஐக்கிய நாடுகள் அமைப்பின் மனித உரிமைப் பிரகடனத்தின் கீழ் 145 நாடுகள் கையொப்பமிட்ட பொருளாதார, சமூக, கலாசார உரிமைகளின் சர்வதேச ஒப்பந்தத்தின்படி, உணவுப் பாதுகாப்பு மனித உரிமை ஆக்கப்பட்டது. 1966-ம் ஆண்டு டிசம்பர் 16-ம் தேதி நடைமுறைக்கு வந்த இந்த ஒப்பந்தத்தில், அன்றைய பிரதமர் இந்திராகாந்தியின் ஒப்புதலோடு இந்தியாவும் கையெழுத்திட்டது என்பது மத்திய அரசுக்குத் தெரியாததல்ல. 2001-ம் ஆண்டு நவம்பர் மாதம் ஒரு பொதுநல வழக்கில் உச்ச நீதிமன்றம் அளித்த தீர்ப்பில், இந்திய அரசியலமைப்பு சட்டத்தின் 21-வது பிரிவு இந்தியக் குடிமகனுக்கு வழங்குகிற உயிருக்கான பாதுகாப்பு என்பதில் உணவுப் பாதுகாப்பும் அடங்கியிருக்கிறது என்பதை உறுதிப்படுத்தியது.

÷எனவே, உச்ச நீதிமன்றம் அரசின் கொள்கை முடிவுகளில் தலையிடவில்லை, இந்திய அரசால் ஏற்றுக்கொள்ளப்பட்ட உணவுப் பாதுகாப்பு என்னும் அடிப்படை மனித உரிமையை நிலைநாட்டுவதற்கான ஆணையைத்தான் பிறப்பித்தது. ஒரு வேளை உணவைப் பத்திரமாகப் பாதுகாத்து வைப்பதுதான் உணவுப் பாதுகாப்பு என்று ஆட்சியாளர்கள் நினைக்கிறார்களோ என்ற ஐயம் எழுகிறது. ஒரு நாடு நல்ல சட்டங்களால் ஆளப்படுவதைக் காட்டிலும் நல்ல மனிதர்களால் ஆளப்பட வேண்டும் என்று கிரேக்க அறிஞர் அரிஸ்டாட்டில், இந்தியாவுக்காகவே சொல்லி வைத்தார் போலும்.

÷1951-ம் ஆண்டு முதலாவது ஐந்தாண்டு திட்டத்தைத் துவக்கிவைத்துப் பேசிய நேரு, காத்திருக்க நேரமில்லை, உணவில் தன்னிறைவு அடைந்தே ஆகவேண்டும் என்றார்.

அவருக்குப்பின் பிரதமரான லால்பகதூர் சாஸ்திரி "ஜெய் ஜவான் ஜெய் கிஸ0ன்' என்ற முழக்கத்தோடு புசுமைப் புரட்சிக்கும் வெண்மைப் புரட்சிக்கும் அடித்தளம் அமைத்தார். அடுத்துவந்த இந்திராகாந்தி, 1970 களில் வறுமையை ஒழிப்போம், உணவு, உடை, உறைவிடம் என்னும் முழக்கங்களோடு திட்டங்களைத் தீட்டிச் செயல்படுத்தினார். அவரைப்போலவே வறுமை ஒழிப்புத்திட்டங்களில் ராஜீவ் காந்தியும் மிகுந்த அக்கறை காட்டினார்.

÷கார்கால மாங்காய்போல் பிரதமராக வந்த நரசிம்ம ராவ் ஆட்சியில் வறுமை ஒழிப்புத் திட்டங்களுக்கு அதுவரை இல்லாத அளவில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. இந்தியா ஒளிர்கிறது எனக்கூறி காங்கிரஸ்க்கு ஒளிமயமான எதிர்காலத்தை அமைத்துக் கொடுத்த பா.ஜ.க. வின் பிரதமர் வாஜ்பாய் தலைமையிலான அரசும் வறுமை ஒழிப்புத் திட்டங்களை முனைப்புடன் முன்னெடுத்துச் சென்றது. இப்படி பல்வேறு பிரதமர்கள் தொடர் ஓட்டம் சென்று, கையில் சிரத்தையோடு எடுத்துவந்த உணவில் தன்னிறைவு என்னும் குறுந்தடி இப்போது மன்மோகன்சிங் கையில் இருக்கிறது. அவர் சொல்கிறார், ""பண்டித நேரு தொடங்கிய இடத்திலேயே நான் இதைக் கொண்டுபோய் வைத்துவிடுகிறேன்" என்று. காலச் சக்கரம் ஒரு முழுச்சுற்று வந்து நிற்கிறது. ஆனால், பசி என்னும் வயிற்றுத் தீ பற்றி எரிந்துகொண்டிருக்கிறது. உலகில் உருவான புரட்சிகள் பெரும்பாலும் வயிற்றின் வெற்றிடத்திலிருந்து வெடித்து வெளிப்பட்டவை என்பதைத் தெரிந்துகொள்ள ஹாவார்டு பல்கலைக் கழகத்திற்கு செல்லத் தேவையில்லை.

÷நடப்பு ஆண்டில் மட்டும் ரூ. 5 லட்சம் கோடி அளவுக்கு வரிச் சலுகைகளை வாரி வழங்கியிருக்கும் மத்திய அரசு, இருக்கும் தானியத்தை விநியோகிக்க இயலாது என்று உரக்கச் சொல்கிறது. கடந்த 10 ஆண்டுகளில் இந்தியாவில் 49 மெகா கோடீஸ்வரர்களையும் ஒரு லட்சம் கோடீஸ்வரர்களையும் உருவாக்கத்தான் இந்த வரிச் சலுகைகள் அளிக்கப்பட்டதா? வன்முறையின் மிகக்கொடிய வடிவம் வறுமைதான் என்று கூறிய மகாத்மா காந்தியின் பிறந்த தினமான அக்டோபர் 2-ம் தேதியிலிருந்து வறுமைக்கோட்டுக்குக் கீழே இருப்பவர்களுக்கு இலவச சமையல் எரிவாயு அடுப்பும் இணைப்பும் கொடுக்கவிருப்பதாக மத்திய அரசு அறிவித்துள்ளது.

அந்த அடுப்பின்மீது வைக்கப் பாத்திரமும் அதில்போட்டு சமைத்திட தானியமும் அவர்களிடம் இருக்கிறதா என்பதைத் தெரிந்துகொள்ள வேண்டும் என்று எந்தப் பொருளாதார நிபுணரும் சொல்லவில்லை என்றே தெரிகிறது.

÷வாக்கு வங்கிகளைக் குறிவைத்து அரசியல் கட்சிகளுக்கிடையே நடக்கின்ற தேர்தல் யுத்தத்தில் பயன்படுத்தப்படும் கணைகளில் ஒன்றாக செல்ஃபோன் உருவெடுத்திருக்கிறது. வறுமைக்கோட்டுக்குக் கீழே இருப்பவர்களுக்கு இலவச செல்ஃபோன் வழங்கும் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. வறுமையை ஒழிக்க இப்படிப்பட்ட திட்டங்களைத் தீட்டிய ஒரே நாடு உலக அளவில் இந்தியாவாகத்தான் இருக்கும்.

÷1994-ம் ஆண்டு வடகிழக்கு ஆப்பிரிக்காவில் இருக்கும் சூடான் நாட்டில் கடுமையான உணவுப் பஞ்சம் நிலவியது. பஞ்சத்தின் கோரக் காட்சிகளைப் பதிவு செய்த கெவின் கார்ட்டர் என்னும் நிழற்படக் கலைஞர் எடுத்த நிழற்படம் ஒன்றுக்கு மிக உயரிய விருதான புலிட்ஸர் விருது கிடைத்தது.
அந்த நிழற்படத்தில், பட்டினியின் உச்சத்தில் தோலால் போர்த்தப்பட்ட எலும்புக்கூடாக, நிற்கக்கூட தெம்பில்லாத நான்கு வயதுக் குழந்தை முழங்கால் பதித்துக் குப்புறக் கிடக்கிறது. அந்தக் குழந்தையைக் கொத்தித் தின்பதற்குத் தயாராக பிணந்தின்னிக் கழுகு ஒன்று அருகில் அமர்ந்திருக்கிறது.
இந்தியா சூடானைவிட பெரிய, பரந்துவிரிந்த ஒரு துணைக் கண்டம். இங்கு ஒன்றல்ல, ஆயிரமாயிரம் பணந்தின்னிக் கழுகுகள் காத்துக்கிடக்கின்றன.

தினமலர்

**விவசாயிகள் விவரம் இணையதளத்தில் பதிவு**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 22,2010,02:46 IST

பேரம்பாக்கம்: அரசு வழங்கும், மானிய திட்டங்களை பெற வசதியாக விவசாயிகள் தங்களது புள்ளி விவரங்களை, இணையதளத்தில் பதிவு செய்யுமாறு கடம்பத்தூர் வேளாண்மை உதவி இயக்குனர் அறிவித்துள்ளார். தமிழகத்தில் வேளாண்மைத் துறை சார்பில் இணையதளம் துவங்கப்பட்டுள்ளது. இதில் விவசாயி பெயர், தகப்பனார் பெயர், கிராமம், முகவரி, வயது, பிறந்த தேதி, பயிர் விவரம், நன்செய், புன்செய் நிலத்தின் பரப்பளவு, பாசன விவரம், வங்கி சேமிப்பு கணக்கு எண் ஆகிய விவரங்கள் சேகரிக்கப்படுகின்றன. இந்த விவரங்கள் பதிவு செய்யப்பட்டதும், விவசாயிகளுக்கு குறியீடு எண் வழங்கப்படும். வரும் காலத்தில் விவசாயிகள் தங்களது குறியீட்டு எண்ணை பயன்படுத்தித்தான், அரசு மானிய திட்டங்களை பெற முடியும். கடம்பத்தூர் ஒன்றியத்தில், 18 ஆயிரத்து 520 விவசாய குடும்பங்கள் உள்ளன. எனவே, ஒன்றிய விவசாயிகள் தங்கள் பகுதி வேளாண்மை உதவி அலுவலர்களை அணுகி, மேற்கூறிய விவரங்களை பதிவு செய்ய வேண்டும். இதற்கான விண்ணப்பங்கள் கடம்பத்தூர், பேரம்பாக்கம், மணவாளநகர் ஆகிய வேளாண்மை விரிவாக்க மையங்களில் கிடைக்கும். இவ்வாறு கடம்பத்தூர் வேளாண்மை உதவி இயக்குனர் லேபாக்சீசுவர் தெரிவித்துள்ளார்.

**செயற்கை உரங்களால் பல தீங்குகள் வேளாண் விஞ்ஞானி கருத்து**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 22,2010,02:31 IST

திருவள்ளூர்: திருவள்ளூர் அடுத்த கசுவா கிராமத்தில் சேவாலயா பள்ளியில் இயற்கை வேளாண்மை கருத்தரங்கம் நடந்தது. சேவாலயா நிறுவனர் முரளிதரன் வரவேற்றார். இதில் இயற்கை வேளாண் விஞ்ஞானி டாக்டர் ஜி.நம்மாழ்வார் கலந்துகொண்டு கருத்துகளை கூறினார். அவர் கருத்தரங்கில் பேசியதாவது: தற்போதைய காலகட்டத்தில் நிலங்கள் எல்லாம் உப்பு நிலங்களாக மாறியுள்ளன. நிலம் தன் தன்மையை முற்றிலும் இழந்து உவர் நிலமாக மாறியுள்ளது. செயற்கை உரங்களின் மூலம் விளைந்த உணவை உண்பதால் பல தீங்குகள் ஏற்படுகின்றன. இயற்கை விவசாயத்தில் உற்பத்தி செய்யப்படும் உணவுகளால் பல நன்மைகள் ஏற்படுகின்றன. இவ்வாறு அவர் பேசினார். தொடர்ந்து இயற்கை விவசாயம் செய்யும் பல்வேறு விவசாயிகளின் அனுபவங்களையும் கேட்டறிந்தார். இதில் நூற்றுக்கும் மேற்பட்ட விவசாயிகளும், விவசாய பிரிவு மாணவர்களும் கலந்துகொண்டனர். சேவாலயா ஒருங்கிணைப்பாளர் வெங்கடரமணி நன்றி கூறினார்.

**ஈரப்பதத்தை காரணம் காட்டி நெல் விலை வீழ்ச்சி : குறுவை பயிரிட்ட விவசாயிகள் சோகம்**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 22,2010,00:03 IST

கடலூர் : குறுவை நெல் அறுவடை துவங்கி வரத்து அதிகரித்துள்ளதால் மார்க்கெட்டில் விலை வீழ்ச்சி அடைந்துள்ளது. கடலூர் மாவட்டத்தில் 18 ஆயிரம் எக்டர் பரப்பளவில் நெல் பயிர் செய்ய திட்டமிடப்பட்டது. ஆனால் கூடுதலாக 21 எக்டர் பரப்பளவில் குறுவை நெல் சாகுபடி செய்யப்பட்டது. காவிரி டெல்டா பகுதியான சிதம் பரம், காட்டுமன்னார் கோவில் பகுதியில் குறைந்த அளவும், நிலத்தடி நீர் உள்ள பகுதியான விருத்தாசலம், கம்மாபுரம், கடலூர் ஒன்றியங்களில் கூடுதலாகவும் குறுவை நெல் சாகுபடி செய்யப்பட்டது. தற்போது அறுவடைக்கு தயாராக இருந்த நேரத்தில் திடீர் மழையின் காரணமாக அறுவடை தாமதமானது. பல இடங்களில் நெற்பயிர்கள் மழையில் நனைந்தன.

கடந்த 4 நாட்களாக வெயிலடித்து வருவதால் மேடான பகுதிகளில் அறுவடை துவங்கியுள்ளது. கடந்த 3 நாட்களாக அறுவடை செய்யப்படும் நெல் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்திற்கு வரத்து அதிகரித்துள்ளது. விவசாயிகள் சம்பா சாகுபடி துவங்க இருப்பதால் அறுவடை தீவிரமடைந்துள்ளது. மழையை காரணம் காட்டி வியாபாரிகள் நெல் விலையை கடுமையாக குறைத்துள்ளனர். கடந்த16ம் தேதி ஐ.ஆர். 50 ரகம் அதிக பட்சமாக 649 ரூபாயும், ஏ.டி.டி., 39 ரகம் 750 ரூபாயும் விலை போனது.

17ம் தேதி விவரப்படி விலை ஏ.டி.டி.39 அதிகபட்ச விலையாக 623ம், ஐ.ஆர்.50 ரகம் 610ம் விற்பனையானது.

கடந்த 21, 22ம் தேதியில் டீலக்ஸ் பொன்னி குறைந்த பட்சம் 720 ரூபாய் முதல் 776 ரூபாய் வரையிலும், ஐ.ஆர்.50 ரகம் 549 முதல் 632ம், ஏ.எஸ்.டி., 16 ரகம் 740 முதல் 894 வரையிலும், ஏ.டி.டி.36 ரகம் 730 முதல் 776 வரையிலும், ஏ.டி.டி. 39 ரகம், 780 - 821 வரையிலும் விலை போனது. இந்த விலை கடந்த சீசனைக் காட்டிலும் மூட்டை ஒன்றுக்கு 50 ரூபாய் முதல் 70 ரூபாய் குறைவாக உள்ளது. ஆனால் நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் நெல்லுக்கு கூடுதல் விலை கொடுக்கப்படுகிறது. கடலூர் ஊராட்சி ஒன் றியத்தில் சி.என். பாளையம் நெல் கொள்முதல் நிலையம் துவங்கப் பட் டுள்ளது. இந்த கொள்முதல் நிலையத்தில் 17 சதவீதம் ஈரப்பதம் வரை இருந் தால் மட்டுமே கொள்முதல் செய்யப்படும். இங்கு கொள்முதல் செய்யப்படும் நெல் ரகங்கள் சன்ன ரகம் ஒரு குவிண்டால் 1,100ம், காமன் கிரேட் 1,050 முதல் 1,100 ரூபாய் வரையிலும் கொள்முதல் செய்யப்படுகிறது.

ஆனால் ஈரப்பதம், வண்டி வாடகைக் கட்டணம் ஆகியவற்றை கணக் கிட்டு விவசாயிகள் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தை அணுகி வருகின்றனர். ஆனால் மார்க் கெட் கமிட்டியில்  விலை குறைந்து வருவதால் விவசாயிகள் கவலையடைந் துள்ளனர். ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தின் விலையைக் காரணம் காட்டி கிராமப் பகுதியில் உள்ள வியாபாரிகளும் கடுமையாக விலையை குறைத்துள்ளனர். தற்போதுள்ள விவசாய கூலி பிரச்னையில் பெரிய அளவிலான லாபம் கிட்டுவதில்லை. மிக குறைந்தபட்ச வருவாயே கிடைக் கும். ஆனால் தற்போது சாதாரணமாக கிடைக்கும் விலையை விட மேலும் குறைந்துள்ளதால் விவசாயிகள் சோகத்தில் ஆழ்ந்துள்ளனர்.

**செம்மை நெல் சாகுபடி செயல்முறை விளக்க பயிற்சி**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 22,2010,00:21 IST

காட்டுமன்னார்கோவில் : குமராட்சி அருகே நந்திமங்கலம் கிராமத்தில் செம்மை நெல் சாகுபடி செயல்முறை விளக்கப் பயிற்சி நடந்தது. அண்ணாமலைப் பல்கலைக்கழக வேளாண்மை மாணவர்கள் குமராட்சி அடுத்த நந்திமங்கலம் கிராமத்தில் தங்கி பயிற்சி பெறும் ஊரக வேளாண் அனுபவ பயிற்சி முகாம் நடந்து வருகிறது.
இக்கிராம விவசாயிகளுக்கு செம்மை நெல் சாகுபடி மற்றும் மண் பரிசோதனை குறித்த செயல் விளக்கம் அளிக்கப்பட்டது. ஊராட்சி தலைவர் அமிர்தலிங்கம் தலைமை தாங்கினார். பொறுப்பாசிரியர் ரமேஷ் முன்னிலை வகித்தார். குமராட்சி ஒன்றிய உதவி வேளாண் அதிகாரி சீனுவாசன் பங்கேற்று நெல்

சேமிப்பு, பூச்சி மருந்து தெளிப்பான், மானிய முறையில் உரம் மற்றும் விவசாய உபகரணங்கள் பெறுவது குறித்து கூறினார்.

**விவசாயிகளுக்கு வேளாண் இயந்திரங்கள் வழங்கல்**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 22,2010,00:14 IST

கடலூர் : கடலூர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை அலுவலகத்தில் பயனாளிகளுக்கு பவர் டில்லர், களை எடுக் கும் மற்றும் நடவு நடும் இயந்திரங்கள் வழங்கும் விழா நடந்தது. கலெக்டர் சீத்தாராமன் தலைமை தாங்கி 64 லட் சத்து ஆயிரத்து 531 ரூபாய் மதிப்பிலான பவர் டில்லர், களையெடுக்கும் இயந்திரங்கள் மற்றும் நடவு நடும் இயந்திரங்கள் 28 லட்சத்து 25 ஆயிரத்து 402 ரூபாய்க்கு 50 சதவீதம் மானியத்தில் 16 பயனாளிகளுக்கு வழங்கினார். கரைமேடு மற்றும் கருங்குழி தொடக்க வேளாண் கூட்டுறவு வங்கிகளுக்கு 30 லட்சத்து 3 ஆயிரத்து 851 ரூபாய் மதிப்பிலான வேளாண் இயந்திரங்கள் 50 சதவீதம் மானியத்தில் 13 லட்சத்து 83 ஆயிரத்து 250 ரூபாய்க்கு வழங்கப்பட்டது. டி.ஆர்.ஓ., நடராஜன், வேளாண் இணை இயக்குனர் இளங் கோவன், கலெக்டர் நேர் முக உதவியாளர் (வேளாண்மை) மணி, உதவி செயற்பொறியாளர் பாண்டியன் உடனிருந்தனர்.

**உற்பத்தி அதிகரிப்பால் மரவள்ளிக்கிழங்கு விலை வீழ்ச்சி: விவசாயிகள் கவலை**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 22,2010,00:07 IST

பண்ருட்டி : அதிக உற்பத்தி காரணமாக மரவள்ளிக் கிழங்கு விலை வீழ்ச்சியடைந்ததால் விவசாயிகள் கவலையடைந்துள்ளனர். பண்ருட்டியைச் சுற்றியுள்ள திருவாமூர், சின்னப் பேட்டை, பண்டரக் கோட்டை, வரிஞ்சிப்பாக்கம், மேலிருப்பு, திருத்துறையூர், கட்டமுத்துப்பாளையம், வீரபெருமாநல்லூர், சிறுகிராமம், மணம் தவிழ்ந்தபுத்தூர், நத்தம், ஒறையூர், கணிசப்பாக்கம் ஆகிய பகுதியில் மரவள்ளிக் கிழங்கு அதிகளவில் பயிரிட்டனர்.

கடந்த ஆண்டு ஒரு டன் மரவள்ளி கிழங்கு 6,000 ரூபாய் அளவில் விற்பனை செய்யப்பட்டது. இந்த ஆண்டு அறுவடை சீசன் துவங்கியுள்ள நிலையில் உற்பத்தி அதிகம் காரணமாக ஒரு டன் 4,500 ரூபாய் முதல் 5,000 ரூபாய் வரை மட்டுமே வியாபாரிகள் கொள்முதல் செய்கின்றனர். ஆட்கள் பற்றாக்குறை, கூலி உயர்வு, உரம், மருந்து விலை உயர்வு என பல்வேறு பிரச்னைகளில் சிக்கித் தவிக்கும் விவசாயிகள் மரவள்ளிக் கிழங்கிற்கு கூடுதல் விலை கிடைக்காததால் கவலையடைந்துள்ளனர்.

**விவசாயிகளுக்கு அங்கக பண்ணைய பயிற்சி**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 21,2010,00:50 IST

விருத்தாசலம் : விருத்தாசலம் வேளாண்மை உதவி இயக்குனர் அலுவலகத்தில் விவசாயிகளுக்கு அங்கக பண்ணைய பயிற்சி அளிக்கப்பட்டது.
விருத்தாசலம் வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் அலுவலகத்தில் தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக் கழக கரும்பு ஆராய்ச்சி நிலையம் மற்றும் வேளாண்மை உதவி இயக்குனர் அலுவலகம் சார்பில் விவசாயிகளுக்கு அங்கக பண்ணையம் மற்றும் அங்கக உர உற்பத்தி பயிற்சி அளிக்கப்பட்டது.பேராசிரியர் நசீர் அகமது தலைமை தாங்கினார். உதவி இயக்குனர் ஹரிதாஸ் முன்னிலை வகித்தார். உழவியல் பேராசிரியர் மாணிக்கம் அங்கக பண்ணையம் குறித்து பேசினார். பயிற்சியில் கலந்து கொண்ட 100 விவசாயிகளுக்கு இணை பேராசிரியர்கள் துரைசாமி, ஜெயச்சந்திரன் பயிற்சி அளித்தனர். வேளாண்மை அலுவலர் விஜயகுமார் பங்கேற்றனர்.

**கரும்பு பயிரிட விவசாயிகள் மீண்டும் ஆர்வம் : பயறு வகை சாகுபடி பெருமளவில் குறைவு**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 22,2010,00:49 IST

தியாகதுருகம் : தியாகதுருகம் பகுதியில் பயறு வகை பயிர்களை சாகுபடி செய்வதில் விவசாயிகள் ஆர்வம் காட்டவில்லை.  கடந்த 10 ஆண்டுகளில் இப்பகுதியில் பயறு வகை உற்பத்தி பெரு மளவில் குறைந்துள்ளது. தியாகதுருகம் பகுதியில் செம்மண் வளம் நிறைந்த நிலங்கள் அதிகம் உள்ளன. இந்நிலங்கள் அனைத்து வகையான பயிர் சாகுபடி செய்ய ஏற்றதாக உள்ளது. கடந்த சில ஆண்டுகளுக்கு முன் நன்செய் நிலங்களில் நெல், கரும்பு மட்டுமே முக்கிய சாகுபடி பயிராக இருந்தது.

வேளாண்துறை முயற் சியால் மஞ்சள், மரவள்ளி, ஒட்டுரக பருத்தி போன்ற பயிர்களை சில விவசாயிகள் சாகுபடி செய்து பலனடைந்தனர். கடந்த மூன்று ஆண்டுகளுக்கு முன் கரும்பு சாகுபடியில் பெருத்த நஷ்டம் ஏற்பட்டதால் அதனை பலரும் கைவிட்டனர். அந்த நேரத்தில் மக்காச் சோளம் சாகுபடி செய்து பலரும் லாபம் ஈட்டினர்.  தற் போது கரும்புக்கு நல்ல விலை கிடைப்பதாலும் கொள்முதல் செய்ய தனியார் சர்க்கரை ஆலைகள் நிறுவப்பட்டதாலும் மீண்டும் கரும்பு பயிருக்கு மாறியுள்ளனர்.

கடந்த 10 ஆண்டுகளுக்கு முன் வரை பயறு வகை சாகுபடி செய்வதில் இப்பகுதி விவசாயிகள் பலரும் ஆர்வம் காட்டி வந்தனர். கடந்த காலங்களில் இறவை மற்றும் மானாவாரியில்  துவரை, பாசிப் பயிறு, உளுந்து, தட்டைபயிறு, கொள்ளு, காராமணி ஆகியவைகளை அதிக பரப்பில் பயிரிட்டு வந்தனர். இது நாளடைவில்  வெகுவாக குறைந்துவிட்டது. பயறுவகை பயிர்களை பாதுகாப்பதும், அதனை அறுவடை செய்து மணிகளை பிரித்தெடுப்பதற் கும் அதிக கூலியாட்கள் தேவைப்படுவதால் பலருக்கும் ஆர்வம்

குறைந்தது. இப்பகுதியில் மானாவாரியில் உளுந்து பயிரிடுவது மட்டும் ஒவ்வொரு ஆண் டும் அதிகரித்து வருகிறது.

கடந்த ஆண்டு தியாகதுருகம் பகுதியில் துவரை 50 ஏக்கர், உளுந்து 8,500 ஏக்கர், பாசிப்பயிறு 250 ஏக்கர், தட்டைபயிறு 480 ஏக்கர் பயிரிடப்பட்டிருந்தது. இதில் காராமணி, கொள்ளு ஆகிய பயறு வகைகளை ஒருவரும் சாகுபடி செய்யவில்லை. கடந்த 10 ஆண்டுகளுக்கு முன் வரை உளுந்து தவிர்த்து மற்ற பயறு வகைகள் 1,000 ஏக்கருக் கும் அதிகமான பரப்பில் இப்பகுதி விவசாயிகள் பயிரிட்டனர். நாளடைவில் மானாவாரி நிலங்களில் செழித்து வளர்ந்து எதிர்பார்த்த லாபத்தை ஈட்டிதரும் உளுந்து மட்டுமே அதிக பரப்பில் சாகுபடி செய்யும் பயறு வகையாக உள்ளது.

தகுந்த சூழலும், லாபம் கிடைக்க வழியிருந்தும் மற்ற பயறு வகைகளை பயிரிட பெரும்பாலான விவசாயிகள் புறக்கணித்து வருகின்றனர். பயறு வகைகளுக்கு மார்க்கெட்டில் நல்ல விலை கிடைப்பதால் இவ்வகை பயிர்களை மீண்டும் சாகுபடி செய் தால் கூடுதல் லாபம் ஈட்ட வாய்ப் புள்ளது. வேளாண் துறை அதிகாரிகள் விவசாயிகளுக்கு போதிய ஆலோசனை வழங்கி மீண்டும் பயறு வகை சாகுபடி பரப்பை அதிகரிக்க முயற்சி எடுத்தால் அதன் உற்பத்தி அதிகரிக்கும்.

**பயிர் பாதுகாப்பு கருவி வாங்க அரசு மானியம்**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 21,2010,02:19 IST

ராசிபுரம்: "ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டு திட்டத்தின் கீழ், பயிர் பாதுகாப்பு கருவிகள் வாங்க மானியம் வழங்கப்படுகிறது' என, கொல்லிமலை தோட்டக்கலைத்துறை உதவி இயக்குனர் சையத் அன்சர் பாஷா தெரிவித்துள்ளார்.அவர் வெளியிட்டுள்ள அறிக்கை:கொல்லிமலையில் உள்ள பழங்குடி மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தவும், விவசாயப் பொருள்களின் உற்பத்தியை பெருக்கி அதிக வருவாய் ஈட்டவும் நடப்பு ஆண்டு ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டு திட்டத்தின் கீழ், பலா ஒட்டுச்செடி, சில்வர் ஓக், காப்பி உள்ளிட்டவைகளுக்கு 75 சதவீதமும், பயிர் பாதுகாப்பு கருவிகள் பெற 75 சதவீதமும், காய்கறி, நாற்றுகள் மற்றும் நுண்ணீர்ப்பாசன கருவிகள் வாங்க 90 சதவீதமும் மானியம் வழங்கப்படுகிறது.இத்திட்டத்தில் பயனாளிகளாக மலைவாழ் விவசாயிகள் தேர்வு செய்யும் பணி துவங்கப்பட்டுள்ளது. எனவே, இத்திட்டத்தின் மூலம் பயன்பெற விரும்பும் விவசாயிகள் உரிய ஆவணங்களுடன் செம்மேடு வேளாண் விரிவாக்க மையத்தில் உள்ள தோட்டக்கலைத்துறை உதவி இயக்குனரை நேரில் தொடர்பு கொள்ளலாம்.இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

**லாபம் தரும் நாட்டுக்கோழி வளர்ப்பு**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 22,2010,01:56 IST

திருப்பூர்:""மருத்துவ குணங்களுக்காக நாட்டுக்கோழி அதிக அளவில் வளர்க்கப்படுகிறது. மேலும், விவசாயிகள் அதிக அளவில் லாபம் பெறுகின்றனர்,'' என கால்நடைத்துறை டாக்டர் கார்த்திகேயன் தெரிவித்தார்.கால்நடை வளர்ப்பை ஊக்குவிக்க, மாவட்ட அளவிலான நாட்டுகோழி வளர்ப்பு சிறப்பு முகாம், திருப்பூர் கால்நடை மருத்துவ ஆராய்ச்சி மற்றும் பல்கலையில் நேற்று நடந்தது. திருவள்ளூர், கும்பகோணம், சிறுமுகை, பொள்ளாச்சி, காரமடை, பெரியநாயக்கம்பாளையம்உள்ளிட்ட பகுதிகளில் இருந்து விவசாயிகள் பங்கேற்றனர். நாட்டுக் கோழி வளர்ப்பு மற்றும் நோய் தடுப்பு முறை குறித்து டாக்டர் கார்த்திகேயன், மதிவாணன் ஆகியோர் பேசினர்.டாக்டர் கார்த்திகேயன் பேசியதாவது:லாபம் அதிகம் ஈட்டித்தருவதால், (கிலோவுக்கு 60 ரூபாய் வரை) மற்ற கால்நடைகளைவிட, நாட்டுக்கோழி வளர்ப்பு அதிகரித்துள்ளது.

பிராய்லர் கோழிகள் மூன்று வாரத்தில் வளர்க்கப்பட்டு பயன் தருகின்றன. நாட்டுக்கோழி மூன்று மாதத்துக்கு ஒருமுறை மட்டுமே பயன் தருகிறது.இருப்பினும், நாட்டுக்கோழியில் கொழுப்புச்சத்து அதிகம்; இயற்கையானது. சாதாரணமான கடைகளில் கூட கிலோ 240 வரை விலைக்கு விற்கப்படுகிறது. மற்ற கோழி ரகங்களை விட, மருத்துவ குணம் நிறைந்தது. நோயாளிகள் உடல் நலத்துக்கு ஏற்றது. குறிப்பாக, இருதய நோயாளிகள், எதிர்ப்பு சக்தி குறைவாக உள்ள வயதானவர்கள் விரும்பி சாப்பிடுவர்.கிராமப்புறத்தில் இயற்கையான சூழ்நிலையில் வளர்ப்பதால், நாட்டுக்கோழிக்கு அதிக நோய் பாதிப்பு ஏற்படாது. கோழிகளுக்கு தவறாமல் தடுப்பூசி போட வேண்டும். நாட்டுக்கோழி வளர்ப்பு, நோய் தடுப்பு முறைகள் குறித்த சந்தேகங்களுக்கு மாவட்ட கால்நடைத்துறை ஆராய்ச்சி மற்றும் பல்கலையை நாடலாம், என்றார்.தடுப்பூசி போட கோரிக்கை: நாட்டுக்கோழி வளர்ப்பை ஊக்குவிப்பதை போல், மற்ற கால்நடை வளர்ப்பிலும் கால்நடைத்துறை அதிக கவனம் செலுத்த வேண்டும். கால்நடைத்துறை முகாம் நடத்துவது மட்டுமே பணியாக கொள்ளாமல், பயனாளிகள் வீடுகளுக்குச் சென்று தடுப்பூசி போட வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை வைத்தனர்.

**தேங்காய் எண்ணெய் விலை கிர்ர்ப்**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 22,2010,02:03 IST

திருப்பூர்:ஒரு வாரத்தில் தேங்காய் எண்ணெய் விலை கிலோவுக்கு 12 ரூபாய் அதிகரித்துள்ளது; காய்கறி மற்றும் பூண்டின் விலையும் உயர்ந்துள்ளது.மார்க்கெட் நிலவரம் வருமாறு:சமையல் ஆயில் வியாபாரிகள் சங்க தலைவர் சந்திரன் கூறியதாவது:கொப்பரை தேங்காய் ஏற்றுமதி நடப்பதால், தேங்காய் எண்ணெய் வரத்து குறைந்து, விலை உயர்ந் துள்ளது. கடந்த ஒரு வாரத்தில் 68 ரூபாயில்

இருந்து 12 ரூபாய் அதிகரித்து விட்டது. தொடர்ந்து விலை உயர்வதற்கான வாய்ப் புள்ளது. இதர எண்ணெய் விலை யில் அதிக மாற்றம் ஏற்பட வில்லை; ஆனால், விலை உயரும் சூழல் இருக்கிறது. தேங்காய் எண் ணெய் கிலோ 80 ரூபாய்; கடலை எண்ணெய் 93; விளக்கெண்ணெய் 92; ரீபன்ட் ஆயில் 104; சூரியகாந்தி எண்ணெய் 70; நல்லெண்ணெய் 85; பாமாயில் 52; நெய் 280 ரூபாய்க்கு விற்கிறது, என்றார்.ஊட்டி பூண்டு விலை கிடுகிடு: பூண்டு வியாபாரி குமார் கூறுகையில், ""குஜராத் மாநிலத்துக்கு, விதைக் காக, ஊட்டி பூண்டு அதிகளவில் அனுப்பப்படுகிறது. லோக்கல் மார்க்கெட்டில் இதன் விலை உயர்ந்துள்ளது.

ஊட்டி மலை பூண்டு கிலோவுக்கு 30 ரூபாய் முதல் 40 ரூபாய் வரை அதிகரித்து, 220 முதல் 300 ரூபாய் வரை விற்பனை செய்யப்படுகிறது. இமாச்சல பூண்டு 200 முதல் 220 வரை, மீடியம் 180 முதல் 200 வரை; நாட்டு பூண்டு 100 முதல் 120 ரூபாய் வரை விற்கிறது," என்றார்.காய்கறி விற்பனை அதிகரிப்பு: புரட்டாசி மாதத்தில் பெரும் பான்மையோர் அசைவ உணவை கைவிட்டு, சைவ உணவை உட் கொள்கின்றனர். இதன் காரணமாக காய்கறி விற்பனை 40 சதவீதம் உயர்ந்துள்ளது.காய்கறி வியாபாரிகள் கூறியதாவது:புரட்டாசி மாதம் துவங்கியதும் 40 சதவீதம் விற்பனை உயர்ந் துள்ளது. சின்ன வெங்காயம் மற் றும் பெரிய வெங்காயம் கிலோ வுக்கு நான்கு முதல் ஆறு ரூபாய் வரை; அவரை, பீர்க்கன், வெண்டை கிலோவுக்கு ஐந்து ரூபாய் அதிகரித் துள்ளது. நாட்டு காய்கறிகளின் விலையும் சூடுபிடித்துள்ளது.கத்தரி கிலோ 18 ரூபாய்; சின்ன வெங்காயம் 20; பெரிய வெங் காயம் 20; தக்காளி 12; புடலை 16; பீர்க்கன் 24; சுரைக்காய் 10; மேரக்காய் 12; உருண்டை மிளகாய் 20, சம்பா 15; வெண்டை 20; பொறியல்தட்டை 20; கோஸ் 15; கேரட் 24; பீன்ஸ் 24; அரசாணி மற்றும் பூசணி 10; அவரை 28; பீட்ரூட் 10; பாகல் 24; இஞ்சி 30; கறிவேப்பிலை 15; கீரை வகைகள் கட்டு ஒரு ரூபாய்; கொத்தமல்லி கட்டு 5 ரூபாய்க்கு விற்கிறது, என்றார்.பூ விற்பனை நார்மல்: பூ வியாபாரிகள் சங்க செயலாளர் சக்திவேல் கூறுகையில், ""பூ விற் பனை நார்மலாக உள்ளது. மல்லிகை கிலோ 100 ரூபாய் முதல் 120 வரை; கனகாம்பரம் 200; அரளி 30 ரூபாய் முதல் 50 வரை; சம்பங்கி 30; செவ்வந்தி 30; மாலை பெரியது 80 முதல் 100 வரை, சிறியது 25, 30; ரோஸ், செண்பகம் மற்றும் டெலியா பூ ஒரு ரூபாய்க்கு விற்கிறது. இதே விலை மற்றும் விற்பனை நீடிக்கும்," என்றார்.

இலை விற்பனை "டல்' பூ மார்க்கெட் செயலாளர் ரத்தினசாமி கூறுகையில், ""புரட்டாசி மாதத் தில் விசேஷ நாட்கள் குறைவாக இருப்பதால், வாழை இலை விற்பனை சரிவடைந்துள்ளது. ஒரு கட்டுக்கு 80 ரூபாய் வரை குறைந்து, 170 ரூபாய்க்கு விற் கிறது. தலைவாழை இலை மூன்று ரூபாயில் இருந்து 1.25 ரூபாய்; சாப்பாட்டு இலை இரண்டு ரூபாயில் இருந்து 80 காசு; டிபன் இலை 1.25 ரூபாயில் இருந்து 60 காசாக குறைந்துள்ளது. வரும் புரட்டாசி 25ம் தேதிக்கு பின், விற்பனை சூடுபிடிக்கும் வாய்ப் புள்ளது," என்றார்.
பாசிப்பருப்பு விலை வீழ்ச்சி: திருப்பூர் மார்க்கெட் வியாபாரிகள் சங்க தலைவர் பாலசுப்ரமணியம்

கூறுகையில், ""பாசிப்பருப்பு விலை கிலோவுக்கு 13 ரூபாய் குறைந்து, 65 ரூபாய்க்கு விற்கிறது. முந்திரி 60 ரூபாய் அதிகரித்து கிலோ 380 ரூபாய்க்கு விற்பனையாகிறது. பாசிப்பருப்பு வரத்து நன்றாக உள்ளது. துவரம் பருப்பு கிலோ 58; உருட்டு உளுந்து 84; கருப்பு உளுந்து 68; பாசிப்பயறு 60; தட்டைபயறு 36; சுண்டல்கடலை 36; கொள்ளு 26; வரமிளகாய் 50 முதல் 58 வரை; கடலை பருப்பு 33; அஸ்கா 28; ஏலக்காய் 1,000; சம்பா ரவை 66 ரூபாய்க்கு விற்கிறது,'' என்றார்.

நெல் கொள்முதல் நிலையம், கிடங்கு மோசம்

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 21,2010,00:49 IST

தஞ்சாவூர்: தஞ்சாவூரில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழக ஏ.ஐ.டி.யு.சி., தொழிற்சங்க மாநில நிர்வாகக்குழு கூட்டம் மாநில துணைத்தலைவர் சிவானந்தம் தலைமையில் நடந்தது.மாநில பொதுச் செயலாளர் சந்திரகுமார், பொருளாளர் கோவிந்தராஜன், துணைத்தலைவர் சந்தானம், சென்னை செல்வராசு, திருவாரூர் வேதநாராயணன், தஞ்சை சூரியமூர்த்தி, திருத்துறைப்பூண்டி சுப்பிரமணியன் உட்பட பலர் பேசினர். சுமை தூக்கும் தொழிலாளர் சங்க மாநில பொதுச் செயலாளர் பெருமாள் 83வது பிறந்த நாளை முன்னிட்டு கவுரவிக்கப்பட்டார்.பனி, மழை காலங்களில் 17 சதவீத ஈரப்பதம் வரை கொள்முதல் செய்ய வாய்ப்பில்லை. ஆனால், நெல் கொள்முதலில் 17 சதவீத ஈரப்பதம் உள் நெல் கொள்முதல் செய்ய வேண்டும் என்று நடைமுறைக்கு பொருந்தாத வகையில் கொள்முதல் செய்யப்படுகிறது. இது விவசாயிகளுக்கு மிகுந்த சிரமத்தையும், பணியாளர்களுக்கு சங்கடத்தையும் உருவாக்குகிறது.

தனியார் வியாபாரிகள் இதை வாய்ப்பாக பயன்படுத்தி கொள்ளை லாபம் பெறுவதும், விவசாயிகள் வஞ்சிக்கப்படுவதும் தொடர்கிறது. அவ்வப்போது முடிவு செய்யும் முறையை கைவிட்டு ஆண்டு தோறும் செப்டம்பர் முதல் ஜனவரி வரை 20 சதவீதம் வரை நெல் கொள்முதல் செய்ய நிரந்தரமான ஆணையை பிறப்பித்து அமல்படுத்த தமிழக அரசை வலியுறுத்த வேண்டும்.சுமை தூக்கும் தொழிலாளருக்கு தற்போது அறிவிக்கப்பட்டுள்ள கூலி உயர்வு போதுமானதல்ல. கொள்முதல் நிலையங்களில் ஒரு மூடை எடை வைத்து தைத்து லாரியில் ஏற்றுவதற்கு 1.87 ரூபாய் வழங்கப்படுகிறது. ஆனால், இதே வேலைக்கு தனியார் ஏழு ரூபாய் வழங்குகின்றனர். எனவே, தனியாருக்கு இணையாக கூலி வழங்க வேண்டும்."ஓய்வு பெற்ற நுகர்பொருள் வாணிபக்கழக பணியாளருக்கு ஓய்வூதியம் இல்லை' என்ற நிலையை மாற்றி, மாதம் ஒரு குறிப்பிட்ட தொகையை கருணைத்தொகைØயாக வழங்க வேண்டும்.

தூத்துக்குடி உதவி தர ஆய்வாளர் முருகன் மரணம் தொடர்பாக நீதி விசாரணை நடத்த வேண்டும்.

குற்றவாளிகள் மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். இதுபோன்று மோசமான சூழ்நிலை மாநிலம் முழுவதும் உள்ள கிடங்குகளில் உள்ளதை போக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். இதை வலியுறுத்தி செப்டம்பர் 28ம் தேதி தஞ்சையில் ஆர்ப்பாட்டம் நடத்துவது.தீபாவளி பண்டிகையை முன்னிட்டு நுகர்பொருள் வாணிபக்கழக பணியாளர்களுக்கு 25 சதவீத போனஸ் வழங்க வேண்டும். சுமை தூக்கும் தொழிலாளருக்கு 2,500 ரூபாய் போனஸ் வழங்க வேண்டும், என தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**கால்நடை தீவன கட்டுப்பாடு**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 21,2010,22:14 IST


ஆண்டிபட்டி: ஆண்டிபட்டியை சுற்றியுள்ள பல கிராமங்கள் விவசாயத்தை சார்ந்துள்ளது. விவசாயிகள் கால் நடை வளர்ப்பை உபதொழிலாக கொண்டுள்ளனர். கடந்த சில மாதங்களாக மழை இன்மையால் வறட்சியின் தாக்கம் அதிகரித்துள்ளது. இருப்பில் இருந்த தீவனங்களை கோடையில் பயன்படுத்தி விட்டனர். மலை சார்ந்துள்ள பகுதிகளில் இருந்து செடிகள், பசுந்தழைகளை சேகரித்து வாகனங்களில் கொண்டு வருகின்றனர். அதிக விலை கொடுத்து வெளியூர்களில் இருந்து தீவனங்களை வாங்கி வந்து சேமித்து வருகின்றனர்.தீவனச்செலவுகள் அதிகரிப்பால் கால்நடை வளர்க் கும் விவசாயிகள் பெரிதும் பாதிப்படைந்துள்ளனர்.

**உயர்தர நாட்டு பசுக்கள்**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 22,2010,00:00 IST

**தார்பார்க்கர் பசு:** இப்பசுவின் பூர்வீகம் ராஜஸ்தான் மாநிலத்தில் உள்ள தார் பாலைவனம் ஆகும். பாகிஸ்தானை ஒட்டிய எல்லையோர கிராமங்களில் இவை பரவலாக காணப்படும். வெள்ளை மற்றும் கருப்பு கலந்த வண்ணத்தில் இவை இருக்கும். இப்பசுக்களின் எடை சுமார் 295-325 கிலோ இருக்கும். நாளொன்றுக்கு 10-15 லிட்டர் பால் கறக்கும். இதன் கொம்புகள் சிறியதாக பின்நோக்கியும் மேல் நோக்கியும் இருக்கும். காதுகள் பெரியதாக முன்னோக்கி தொங்கிக் கொண்டிருக்கும்.
இதர குறிப்புகள்: முதல் ஈத்துக்கு தயாராகும் நாட்கள்-1250. ஈத்து இடைவெளி - 435 நாட்கள். நன்மை செய்யக்கூடிய கொழுப்பு சத்து - 4.9%.







**கிர் பசு:** இதன் பூர்வீகம் குஜராத் மாநிலத்தில் உள்ள கிர் காடுகள் ஆகும். இதன் தோல் செவ்வலை நிறத்தில் மிருதுவாக இருக்கும். சில வகை கிர் பசுக்களுக்கு வெள்ளை புள்ளிகள் இருக்கும். சாந்த குணம் கொண்டது. சிறியவர் கூட பால் கறக்கலாம். இதன் தலை பெரியதாகவும், நெற்றி விரிவடைந்ததாகவும், கண்கள் அரை தூக்கத்தில் இருப்பது போல் தோற்றம் அளிக்கும். காதுகள் நீண்டு சுருண்டு இருக்கும்.
இதர குறிப்புகள்: எடை : 310-335 கிலோ. முதல் ஈத்துக்கு தயாராகும் நாட்கள் - 1550. ஈத்து இடைவெளி - 520 நாட்கள். நாளொன்றுக்கு பால் கறக்கும் திறன் : 10-18 லிட்டர், நன்மை செய்யக்கூடிய கொழுப்புச்சத்து-4.4%

**காங்ரெஜ் பசு:** இதுவும் குஜராத் மாநிலத்தை தாயகமாக கொண்டது. மிகவும் வலிமை வாய்ந்தது. உழவுத் தொழிலுக்கும் இப்பசுக்களை பயன்படுத்தலாம். வெள்ளை மற்றும் கறுப்பு கலந்த வெள்ளை நிறத்தில் இப்பசுக்கள் இருக்கும். நெற்றி அகன்று இருக்கும். கொம்புகள் பெரியதாக அகன்று விரிந்து இருக்கும். மிகவும் சுறுசுறுப்பாக காணப்படும்.
இதர குறிப்புகள்: இதன் எடை: 360-385 கிலோ. முதல் ஈத்துக்கு தயாராகும் நாட்கள் - 1440. ஈத்து இடைவெளி: 490 நாட்கள். நாள் ஒன்றுக்கு பால் கறக்கும் திறன்: 10-15 லிட்டர். நன்மை செய்யக்கூடிய

கொழுப்புச்சத்து: 4.8%.


**இப்பசுக்களின் சிறப்பம்சங்கள்:** வெயில் மற்றும் மழை போன்ற எந்த சீதோஷ்ணத்திற்கும் கட்டுப்பட்டு வாழும். இப்பசுக்களுக்கு நோய் எதிர்ப்பு சக்தி அதிகம். தேவையற்ற ரசாயன ஊசிகள் இதற்கு தேவையில்லை. மருத்துவ செலவுகள் வைக்காது. நோய் எதிர்ப்புசக்தி அதிகம் கொண்ட இப்பசுக்களின் பால் மற்றும் நெய் மனிதனுக்கு பலவகைகளில் நன்மை செய்யக்கூடியவை. இதன் சாணம் மற்றும் கோமியம் அதிக சக்தி வாய்ந்த தொழு உரம் உற்பத்தி செய்ய உதவுகிறது. இயற்கை விவசாயத்திற்கு இது பெருமளவில் உதவிபுரியும். வறட்சிக் காலங்களிலும் இப்பசுக்கள் பால் கொடுக்கும் வல்லமை பெற்றது. இவைகளுக்கு தேவையான விந்தூசி இப்பொழுது தமிழகத்தில் பரவலாக கிடைக்கிறது.
எஸ்.ராஜேந்திரன், 92620 41231.

**ஊட்டச்சத்து பற்றாக்குறைகளைக் கண்டறியும் கணினி மென்பொருள்**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 22,2010,00:00 IST







வேளாண் மற்றும் தோட்டக்கலை பயிர்களில் ஊட்டச்சத்து பற்றாக்குறைகளைக் கண்டறிய இக்கணினி மென்பொருளானது மண் மற்றும் வேளாண்மை வேதியியல் துறை, தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக் கழகத்தால் 2004-ம் ஆண்டில் உருவாக்கப்பட்டது. அகத்தின் அழகு முகத்தில் தெரியும் என்னும் பழமொழிக்கேற்ப பயிர்கள் மண்ணின் ஊட்டச்சத்து நிலையை எடுத்துரைக்கும் காட்டிகளாக செயல்படுவதை அடிப்படையாகக் கொண்டு இந்த மென்பொருள் உருவாக்கப் பட்டுள்ளது. பயிர்களில் வெளிப்படும் ஊட்டச்சத்து குறைபாடுகள் ஊட்டச்சத்துக்களின் பரவும் தன்மை மற்றும் பயிர்வினை நிகழ்வுகளைப் பொறுத்து தனித்தன்மை வாய்ந்ததாகவும் மேலும் பூச்சி, நோய் தாக்குதலால் ஏற்படும் அறிகுறிகளிலிருந்து பிரித்தறியப்படக் கூடியதாகவும் உள்ளது.

இந்த மென்பொருள், பயிர்களிலுள்ள ஊட்டச்சத்து குறைபாடுகள், பற்றாக்குறை அறிகுறிகளை விளக்கும் விளக்க உரைகள், நிவர்த்தி செய்யும் பரிந்துரைகள் ஆகியவற்றைக் கொண்டுள்ளது. மேலும் விவசாயிகள் தங்களுடைய பயிர்களில் தோன்றும் பற்றாக்குறை அறிகுறிகளை விளக்கி அதன்பின் எந்த ஊட்டச்சத்து குறைபாட்டால் அவ்வாறான அறிகுறிகள் தோன்றியது, அதற்கான பரிந்துரைகள் ஆகியவற்றைப் பெறவும் வழிவகை செய்யப் பட்டுள்ளது. கேள்விகளை கணினிக்கு செலுத்தியபின் கணினியானது விளக்கத்தை கொடுக்கும் வகையில் அமைந்துள்ளது. இந்த மென்பொருள் குறுந்தகடுகளில் கிடைக்கிறது.

பயன்கள்: கணினி துணையுடன் ஊட்டச்சத்து பற்றாக்குறைகளை கண்டறிய முடியும். நிவர்த்தி முறைகளை சரியான சமயத்தில் மேற்கொள்ள இயலும். தானியங்கள், பயறுவகைகள், எண்ணெய்வித்துப் பயிர்கள், பருத்தி, கரும்பு, பழங்கள், காய்கறிகள், பூச்செடிகள் போன்ற பல்வேறு பயிர்களை உள்ளடக்கியுள்ளது. இந்த மென்பொருளானது விவசாயிகள், வேளாண் விரிவாக்க அலுவலர்கள், வேளாண் மாணவர்கள் மற்றும் விஞ்ஞானிகளுக்கு பயன்படும் வகையில் கலந்துரையாடும் முறையில் அமைந்துள்ளது. **தொடர்புக்கு: பேராசிரியர் கே.எஸ். சுப்பிரமணியன், த.நா.வே.ப., கோயம்புத்தூர், 98940 65449. -கே.சத்தியபிரபா, 96591 08780.**

**சின்னச்சின்ன செய்திகள்**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 22,2010,00:00 IST



பலா: பிஞ்சு, முற்றாத காய், பழம், அடிமரம், கிளை, சுள்ளி, இலை, சருகுகள் என அளிப்பதுடன் நிழல் தரும் மரமாகவும், பொருளாதார பலன் தரும் மரமாகவும் இயற்கை சுற்றுச்சூழல் பாதுகாக்கும் மரமாகவும் சிறப்புப் பெற்றுள்ளது.
நன்கு வளர்ந்து 20 ஆண்டுகளுக்கு மேலான ஒரு மரம் 1000 கிலோவிற்கு மேலான பழத்தை விளைச்சலாக தரவல்லது. இலை உதிராமல் எப்பொழுதும் பசுமை மாறாத மரமான பலா சுற்றுச்சூழலுக்கு உகந்த மரம். பலா பிஞ்சு, முற்றாத காய்கள் நீரிழிவு நோயாளிகளுக்கு நார்ச்சத்து மிகுந்த உணவாகிறது. பலாச்சுளை மலச்சிக்கலை போக்கும்.
பலாச்சுளையில் புரதம், கொழுப்பு, நார்ச்சத்து, சுண்ணாம்புச்சத்து, பாஸ்பரஸ், இரும்புச்சத்து, வைட்டமின்கள் உள்ளது. மழை குறைவான வறட்சிப் பிரதேசங்களிலும் மழை அதிகம் பெய்யும் இடங்களிலும் சமவெளியிலும் மலைப்பகுதிகளிலும் வளரக்கூடியது.

கிராமங்களில் ஆடி மாதத்தில் அவித்து காயவைத்த, பாதுகாக்கப்பட்ட பலாக்கொட்டையை ஏழைகள் முக்கிய உணவாக உண்பது வழக்கம். முற்றாத காய்களை துண்டுகளாக கீற்றுகளை வெட்டி உப்பு கரைசலில் சேமித்து வேண்டும்போது நல்ல நீரில் ஊறவைத்து பலமுறை அலசிய பின் கறிசமைப்பதும் வழக்கில் உள்ளது. முற்றாத பலாச்சுளையிலிருந்து பலா வற்றல், சிப்ஸ், மாவு ஆகியவற்றிலிருந்து பலவித உணவுப் பண்டங்கள், அரிசி, கோதுமை மாவுடன் சேர்த்தோ தனியாகவோ தயாரிக்கலாம். பழுத்த பலாச்சுளையிலிருந்து அல்வா, பலா ஜுஸ், ஐஸ்கிரீம், குல்பி, மிட்டாய், பலாப்பழ வற்றல், பலாப்புட்டு, பலா ஒயின், ஜாம் ஆகியவை தயாரிக்கலாம். பலாக்கொட்டையிலிருந்து கிடைக்கும் மாவு, உப்புமா, சப்பாத்தி, பூரி, வடை போன்ற பண்டங்கள் செய்ய பயன்படுகிறது. பலாப்பழச் சக்கை, தோல், பலா இலை, சருகு கால்நடைகளுக்கு தீவனமாகிறது. பலா இலையினைக் கொண்டு தையல் இலை தயாரித்து பந்தியில் உணவு பரிமாற பயன்படுத்தப்படுகிறது. வீடு கட்டவும், வீட்டு உபயோக மரச்சாமான்கள் செய்திடவும் பலாமரம் பயன்படுகிறது. மிருதங்கம், தவில், உடுக்கை போன்ற இசைக்கருவிகள் செய்திட பலாமரம் பயன்படுகிறது. உழவர்கள் ஏக்கருக்கு ஒரு மரமோ அல்லது ஒரு

ஏக்கர் தோப்பாகவோ அல்லது வரப்பு ஓரத்திலும் வீட்டு மனையில் இடவசதி உள்ளவர்கள் வீட்டிற்கு ஒரு மரம் என வளர்க்கலாம்.

* கதிரடிக்கும் இயந்திரம் (தமிழக அரசின் ரூ.1,50,000/- மானியம் பெறும் இயந்திரம்) வாங்க தொடர்பு முகவரி: ஸ்ரீ வலசுமணி, ஹைடெக் இன்ஜினியரிங் கம்பெனி,
சிவகிரி-638 109. ஈரோடு மாவட்டம். 04204-240 478; 240 578, 94431 40478, 98658 88178.
web: www.valasumani.com

* மலைவேம்பு சாகுபடி: வடிகால்வசதி உள்ள அனைத்து மண்ணும் ஏற்றது. வயலாகவோ வேலிப்பயிராகவோ வளர்க்கலாம். 8-12 ஆண்டுகளில் மரத்தை அறுவடை செய்யலாம்.
சிறப்பியல்புகள்: மூங்கிலைவிட அதிவேகமாக வளரும் மரம். விறகிலிருந்து மின் உற்பத்தி செய்ய ஏற்ற மரம். 8வது ஆண்டில் அறுவடை செய்தாலும் ஒரு மரம் மிகக்குறைந்தபட்சம் ரூ.5000/- விலைபோகும். மலைவேம்பு சாகுபடி மற்றும் கன்று தேவைகளுக்கு **அ.ஆனந்த், டீ/102, சம்பத் நகர், ஈரோடு, 94439 42446, 98427 42446.**

*** புதுக்கோட்டை பலா:** தென்னைக்கு ஏற்ற ஊடுபயிர். நட்ட தென்னை முதல் 40 வருட தென்னைமரம் வரை. ஒரு ஏக்கர் தென்னையில் 150 மரங்கள். 5 முதல் 6வது வருடங்களில் தொடர்ந்து மகசூல். வறட்சியில் தென்னை வாடினாலும் பலா தொடர்ந்து பலன் தரும். புவி வெப்பமயமாவதைத் தடுப்பதில் பலா பெரும்பங்கு வகிக்கிறது. மேலும் விபரங்களுக்கு: **ஜெகதீஸ்வரர் உயர்ரக நாற்றுப்பண்ணை, கீரமங்கலம் வழி, கொத்தமங்கலம் அஞ்சல், ஆலங்குடி, புதுக்கோட்டை மாவட்டம். குமிழ் எஸ்.டி.சண்முகசுந்தரம், 94860 60136, 98942 91818. -டாக்டர் கு.சௌந்தரபாண்டியன்.**